MADRAS DAY 2026
ESSAY COMPETITION

Madras Institute of Development Studies



IMAGE CREDIT: INTERNET ARCHIVE BOOK IMAGES / WIKIPEDIA

As part of the Madras Day celebrations (22 August 2026), Madras Institute of Development Studies (MIDS) is conducting an essay competition in Tamil and English with themes encompassing Madras' history, heritage and culture for undergraduate and postgraduate students of history in four districts: Chennai, Kanchipuram, Thiruvallur and Chengalpattu. The candidates will be competing for the Best Essay Prize with cash awards (Rs. 3,500 and Rs. 2,500 for the first two places) in both language categories. Essays securing first two places under English language category will be featured in the upcoming issue of *The Policy Chronicle*, a monthly magazine published by students of public policy at MIDS.

EVALUATION

All submissions received for this competition will be scrutinised and evaluated by an internal review committee. The submissions will be subjected to a rigorous plagiarism check, an AI-detection check, and a final evaluation by the committee. The committee will exercise sole discretion in selecting the final winning entries.

THEMES FOR ESSAY WRITING

1. Heritage vs. Megacity: Balancing Madras' Past with Chennai's Future
2. The City of Reform: Radical Social Movements in 19th and 20th Century Madras
3. Madras Nalla Madras:Migration, and the Living City
4. Fight for freedom: Madras in the Movement

SUBMISSION GUIDELINES

1. The essay should be on the themes mentioned herein.
2. Only one submission per applicant will be accepted for consideration.
3. Length of the essay should not exceed 1,500 words. Submissions exceeding the word count may also result in disqualification.
4. The essay should be the candidate's own work. AI-generated submissions will be disqualified without any notice.
5. Formatting: Submission must be in Microsoft Word; Font: Times New Roman for English and Arial Unicode for Tamil submissions to be followed; 12pt., 1.5-line space, A4 size document with 1" margin on all sides.
6. Handwritten submissions are also accepted as PDFs.
7. Submissions must include the candidate's profile as follows: Full Name / Age / Course of study / Department / Institution / Postal address with PIN code / Email.
8. Deadline: Submissions must be sent by or before 14 August 2026 using **this Google Form** link. Email submissions will not be considered.

The winning candidates will be notified by 19 August 2026. Every winner under both language categories is expected to present about their essay for a few minutes at the prize distribution ceremony scheduled to be held at MIDS on 22 August 2026.

SCAN QR
TO SUBMIT

MIDS, 79, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, Chennai 600020 | www.mids.ac.in

சென்னை தினம் 2026
கட்டுரைப் போட்டி

Madras Institute of Development Studies

PHOTO CREDIT: MADRAS MUSINGS / MOUNT ROAD, GEORGE HASSON, C. 1940

சென்னை தின (22 ஆகஸ்ட் 2026) கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் (MIDS) தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்துகிறது. இப்போட்டியின் கருப்பொருள்கள் சென்னையின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைச் சார்ந்தவை. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த வரலாற்றுத் துறை இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் இதில் பங்கேற்கலாம். இரு மொழிப் பிரிவுகளிலும் சிறந்த கட்டுரைக்கான சான்றிதழ் மற்றும் பரிசு காசோலை (முதல் இரண்டு இடங்களுக்கு முறையே ரூ. 3,500 மற்றும் ரூ. 2,500) வழங்கப்படும். ஆங்கிலப் பிரிவில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் கட்டுரைகள், நிறுவனத்தின் பொது கொள்கை மாணவர்களால் வெளியிடப்படும் மாத இதழான The Policy Chronicle-இன் வரவிருக்கும் இதழில் இடம்பெறும்.

மதிப்பீடு

இப்போட்டிக்குப் பெறப்படும் அனைத்து படைப்புகளும் நிறுவன ஆய்வுக் குழுவால் ஆராயப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் தழுவல் சோதனை (plagiarism check), செயற்கை நுண்ணறிவு கண்டறியும் சோதனை (AI-detection) மற்றும் குழுவின் இறுதி மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும். இறுதி வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஆய்வுக் குழுவே முழு அதிகாரம் கொண்டதாக இருக்கும்.

போட்டிக்கான கருப்பொருள்கள்

1. பாரம்பரியம் மற்றும் பெருநகரம்: சென்னையின் கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் சமநிலைப்படுத்துதல்
2. சீர்திருத்த நகரம்: 19- மற்றும் 20-ஆம் நூற்றாண்டு சென்னையின் தீவிர சமூக இயக்கங்கள்
3. மெட்ராஸ் நல்ல மெட்ராஸ்: புலம்பெயர்வும், வாழும் நகரமும்
4. சுதந்திரப் போராட்டம்: விடுதலை இயக்கத்தில் சென்னையின் பங்கு.

சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்கள்

1. கட்டுரை இப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருப்பொருள்களில் ஒன்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.
2. ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரே ஒரு சமர்ப்பிப்பு மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
3. கட்டுரையின் நீளம் 1,500 சொற்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். சொல் எண்ணிக்கையை மீறும் சமர்ப்பிப்புகள் தகுதி நீக்கம் செய்யப்படலாம்.
4. கட்டுரை சமர்ப்பிப்பவரின் சொந்த படைப்பாக இருக்க வேண்டும். AI-யால் உருவாக்கப்பட்ட சமர்ப்பிப்புகள் எந்த அறிவிப்பும் இன்றி தகுதி நீக்கம் செய்யப்படும்.
5. வடிவமைப்பு: Microsoft Word Formatல் இருக்க வேண்டும்; எழுத்துரு: ஆங்கிலத்திற்கு Times New Roman, தமிழுக்கு Arial Unicode பயன்படுத்த வேண்டும்; 12pt., 1.5-line space, A4 அளவு, நான்கு பக்கங்களிலும் 1" விளிம்பு (margin) இருக்க வேண்டும்.
6. கையெழுத்து பிரதிகள் PDF வடிவத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.
7. சமர்ப்பிப்புகளில் தன் விவரக்குறிப்பு இணைக்கப்பட வேண்டும்: முழுப் பெயர் / வயது / இளங்கலை (அ) முதுகலை / துறை / கல்லூரி / அஞ்சல் முகவரி (PIN குறியீட்டுடன்) / மின்னஞ்சல்.
8. சமர்ப்பிப்புகள் 14 ஆகஸ்ட் 2026 அன்று அல்லது அதற்கு முன் இந்த Google Form இணைப்பின் மூலம் அனுப்பப்பட வேண்டும். மின்னஞ்சல் வழி அனுப்பப்படும் சமர்ப்பிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

வெற்றி பெறும் மாணவர்களுக்கு 19 ஆகஸ்ட் 2026 அன்று மின்னஞ்சல் வழியாக அறிவிக்கப்படும். இரு மொழிப் பிரிவுகளிலும் வெற்றி பெறும் ஒவ்வொரு மாணவரும், 22 ஆகஸ்ட் 2026 அன்று MIDS-இல் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் தங்கள் கட்டுரையைக் குறித்து சில நிமிடங்கள் பேச வாய்ப்புத் தரப்படும்.

கட்டுரை சமர்ப்பிக்க
QR ஸ்கேன் செய்யவும்

எம்.ஐ.டி.எஸ், 79, 2வது பிரதான சாலை, காந்தி நகர், அடையாறு, சென்னை 600020 | www.mids.ac.in